# 2026 தேர்தல் – 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி இலக்கு!

# கழகத்தில் 23 அணிகள் இருந்தாலும், ‘எல்லோரும் கலைஞர் அணிதான்’ எனச் செயல்பட வேண்டும்!

## விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!



**விழுப்புரம், நவ.8 –**

**விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், மாவட்ட – ஒன்றிய – நகர – பேரூர் கழக நிர்வாகிகள் – கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தி.மு. கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்.**

**அப்போது அவர், ``2026 சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெல்ல வேண்டும்’ என்று முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கை மனதில் ஏந்தி, அயராது உழைத்திட வேண்டும்” என சிறப்புரையாற்றினார்.**

இதுகுறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

விழுப்புரம் தெற்கு மாவட்ட – ஒன்றிய – நகர – பேரூர் கழக நிர்வாகிகள் – கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்துக்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் என் வணக்கங்கள்.

நேற்று மாலை மதியம் 2 மணியளவில் சென்னையில் இருந்து, சாலை வழியாகக் கிளம்பி விழுப்புரம் வடக்கு மாவட்ட எல்லைக்குள் நுழையும்போது, 4.15 மணி. ஆனால், எங்கு சென்றாலும் மக்கள் வரவேற்பு, கழகத்தினரின் எழுச்சி, எல்லா அணியினரும் போட்டிப் போட்டுக்கொண்டு கொடுத்த வரவேற்பு.

ஒரு அரசு விழாவிற்குச் செல்ல வேண்டியது 05.30 மணி. ஆனால், அங்கு போய்ச் சேர்ந்தது 07.00 மணி. அதற்கு முன்பு, பொன்முடி அண்ணன் சொன்னதைப்போல தலைவர் கலைஞரின் திருவுருவச்சிலையைத் திறந்து வைத்துவிட்டு, அதன் பிறகு பல்வேறு ஆய்வுகள், அதன் பிறகு இன்று காலை விழுப்புரம் மாவட்ட ஆய்வுப் பணிகளில் கலந்து கொண்டு இங்கு வருவதற்குக் காலதாமதம் ஆகிவிட்டது. எனவே, அதிக நேரம் பேச விரும்பவில்லை. உங்களை எல்லாம் சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி.

கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், இன்று விழுப்புரம் தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தின் சார்பு அணி நிர்வாகிகள், உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

### இரண்டு நாள் பயணம்

இந்த விழுப்புரம் மாவட்டத்துக்கு நம் மாவட்டப் பொறுப்பாளர் சொன்னதைப் போல நூற்றுக்கணக்கான முறை வருகை தந்திருக்கிறேன். கழகத்தின் உறுப்பினராக வந்திருக்கிறேன், கழக இளைஞர் அணியின் செயலாளராக வந்திருக்கிறேன், சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன், விளையாட்டுத்துறை அமைச்சராக என்று பல முறை இந்த விழுப்புரம் மாவட்டத்துக்கு வருகை தந்திருக்கிறேன். முதன்முறையாக, தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு, இரண்டு நாள் பயணமாக நேற்று விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

### ஒரே கோரிக்கை

துணை முதலமைச்சர் பொறுப்பை தலைவர் எனக்கு அளித்த பிறகு, அன்றிலிருந்து இரண்டு, மூன்று நாட்களாகத் தொடர்ந்து தொலைபேசியில் அழைப்பு, தமிழ்நாடு முழுக்க இருக்கின்ற அனைத்து கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் எல்லாம் அப்போது சென்னைக்குப் படையெடுத்து வர ஆரம்பித்தார்கள். என்னைப் பார்த்து வாழ்த்து சொல்ல வேண்டும் என்று. அவர்களிடம் நான் சொன்ன ஒரே கோரிக்கை, தயவு செய்து யாரும் சென்னைக்கு வராதீர்கள். நிறைய வேலைகள் இருக்கின்றன. நானே உங்களைத் தேடி வந்து உங்களைப் பார்த்து, உங்கள் வாழ்த்துகளைப் பெற்றுக் கொள்கிறேன்’ என்று உரிமையோடு சொன்னேன். நீங்கள் எல்லாம் கேட்பீர்கள் என்ற உரிமையோடு சொன்னேன். சிலர் கேட்டார்கள். சிலர் கேட்கவில்லை. அது உங்களுக்கு என்மேல் இருக்கின்ற உரிமை.

### விழுப்புரம் மாநாடு

இன்றைக்கு விழுப்புரம் வந்து நேற்று மாலையில் இருந்து உங்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து, உங்களின் வாழ்த்துகளையும், உங்களின் பாராட்டுகளையும், உங்களின் அன்பையும் பெற வந்து இருக்கிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, முத்தமிழறிஞர் கலைஞராக இருக்கட்டும், நம் கழகத் தலைவராக இருக்கட்டும், இந்த மாவட்டத்தின் மீது நம் தலைவர்களுக்கு எப்போதும் ஒரு தனிப்பிரியம், தனிக் கவனம் உண்டு. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், நம் தலைவர் முதன்முதலில் தொடங்கி வைத்த மாநாடு என்றால், அது 2004-ஆம் ஆண்டு அவர் தொடங்கி வைத்த விழுப்புரம் மாநாடுதான்.

நான் இன்றைக்கு எத்தனையோ நிகழ்ச்சிகளை அமைச்சராக, துணை முதலமைச்சராக, விளையாட்டுத்துறை அமைச்சராகத் தொடங்கி வைக்கிறேன். இங்கு அண்ணன் பொன்முடி அவர்கள் சொன்னதைபோல, நம் கௌதம சிகாமணி சொன்னதைப்போல, 21 வருடத்திற்கு முன்பு 2003-ஆம் ஆண்டு முதன்முதலில் நான் தொடங்கி வைத்த விளையாட்டு நிகழ்ச்சி என்றால், விழுப்புரம் மாவட்டத்தில்தான்.

### சிறப்பான வரவேற்பு

அப்போது நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஆவேனா, அமைச்சர் ஆவேனா, துணை முதலமைச்சர் ஆவேனா என்று நான் யோசித்துக்கூடப் பார்த்து இருக்க மாட்டேன். விழுப்புரம் மாவட்டத்தில் விளையாட்டுத்துறை அமைச்சராக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நேற்று விளையாட்டு வீரர்களுக்கு பரிசுத் தொகை, `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ எல்லாம் கொடுத்தோம். இப்படியெல்லாம் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வேன் என்று அப்போது நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அதைச் சாத்தியமாக்கிய மாவட்டம், இந்த விழுப்புரம் மாவட்டம்.

நேற்றும், இன்றும், செல்லும் இடமெல்லாம் நீங்கள் சிறப்பானதொரு வரவேற்பை விழுப்புரம் மாவட்ட மக்கள், நிர்வாகிகள் அளித்தீர்கள்.

கழகத் துணை பொதுச் செயலாளர் அண்ணன் பொன்முடி அவர்கள், விழுப்புரத்தை கழகத்தின் கோட்டையாக உருவாக்கி இருக்கிறார்கள் என்றால், அதற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் நீங்கள்தான் அதற்குக் காரணம், நீங்கள்தான் அதற்குப் பொறுப்பு.

### நீங்களே முக்கியக் காரணம்

அண்ணன் பொன்முடி அவர்கள் பேசும்போது சொன்னார் வெற்றிக்குக் காரணம் தலைவர் அவர்களின் பிரச்சாரம், அதேபோல நான் பிரச்சாரம் செய்தேன் நான்தான் காரணம் என்று சொன்னார். அதில் ஒரு சின்னத் திருத்தம். தலைவரின் பிரச்சாரம் எந்த அளவிற்கு வெற்றிக்குக் காரணமோ, அதே அளவுக்குக் கழகத்தின் நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் நீங்கள் களத்தில் நின்று செய்த பிரச்சாரம்தான் மிகமிக முக்கியக் காரணம். நான் பிரச்சாரம் செய்யும்போதே சொல்வேன், நானாகட்டும், தலைவராகட்டும் ஒவ்வொரு தொகுதிக்குச் சென்று பேசும்போது சொல்வோம், இன்றைக்கு நாங்கள் பேசுகிறோம். நாளைக்கு அடுத்தத் தொகுதிக்கு சென்று விடுவோம். ஆனால், தேர்தல் முடிகின்ற வரைக்கும் அங்கேயே இருந்து ஓட்டுகள் எண்ணி முடித்து, உதயசூரியன் வெற்றி உறுதியாகும் வரை களத்தில் இருப்பது கழகத்திற்காக உழைக்கக்கூடிய அணிகளின் நிர்வாகிகள் நீங்கள்தான்.

நம் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், இன்னொரு சிறப்பு இருக்கிறது நம் தலைவர், தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றியை மட்டுமே பெற்ற ஒரே கட்சி என்றால் அது நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். குறிப்பாக, சென்ற 2024-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில், விழுப்புரம் தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த நம் கூட்டணி வேட்பாளர் அண்ணன் ரவிக்குமார் அவர்களை மிகப்பெரிய வெற்றியைப் பெற வைத்தீர்கள். அதற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைதொடர்ந்து, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில், கிட்டத்தட்ட 68 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அண்ணன் அன்னியூர் சிவா அவர்களை மிகப்பெரிய வெற்றி பெற வைத்தீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நம் இயக்கம், நம் தலைவர்.

அடுத்து மிக முக்கியமான தேர்தல், 2026-ஆம் ஆண்டு வருகின்ற சட்டமன்றத் தேர்தல். இன்றைக்கு, தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் தொடர்பான பணிகளை முதன்முதலில் ஆரம்பித்தது யார் என்று பார்த்தீர்கள் என்றால், நம் இயக்கம்தான், நம் தலைவர்தான். இரண்டு மாதங்களுக்கு முன்பே ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டி, ஒவ்வொரு அணியாக வரவழைத்துப் பேசி இருக்கிறோம். முக்கால் வாசி அணிகள் கிட்டதட்ட 17 அணிகளிடம் பேசிவிட்டோம். இன்னும் கொஞ்ச அணிகள் இருக்கின்றன. தொகுதிப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதேபோல 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் ஆரம்பித்ததில் நாம்தான் முதல் இயக்கம், முடிவுகள் வருகிற நாளிலும், முதல் இயக்கமாக நம் தி.மு. கழகமாக இருக்க வேண்டும். இதனை உறுதிசெய்ய வேண்டும் என்றுதான் நம் தலைவர் அவர்கள் சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டினார்கள்.

### 234 பார்வையாளர்கள்

சட்டமன்றத் தேர்தல் பணிகளை உங்களுடன் இணைந்து, ஒருங்கிணைக்கச் சட்டமன்றத் தொகுதி வாரியாக 234 பார்வையாளர்களை நியமித்துள்ளார்கள். ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில், முதற்கட்டமாகச் சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகளை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் தொடாந்து சந்தித்துக்கொண்டு இருக்கிறோம். அணிகளின் செயல்பாடு, நிரப்பப்படாமல் இருக்கும் பொறுப்புகள், தேர்தலை நோக்கி நாம் செய்ய வேண்டிய பணிகள் ஆகியவற்றை ஆலோசித்துள்ளோம்.

இதனை நம் கழகத் தலைவரிடமும் அவ்வப்பொழுது விளக்கிப் பேசி இருக்கிறோம். அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு ஒரு கட்டளையிட்டு இருக்கிறார். ``இனிமேல், நீ எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் அந்த மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் அளவிலான நிர்வாகிகள் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகளைச் சந்தித்துப் பேச வேண்டும்” எனத் தலைவர் அவர்கள் எனக்குக் கட்டளையிட்டுள்ளார்கள். அந்தக் கட்டளையின்பேரில்தான் இன்றைக்கு இந்தக் கூட்டம் நடந்துக்கொண்டு இருக்கிறது.

நேற்று நம் தலைவர் அவர்கள் கோவையில் அங்கு இருக்கின்ற ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களோடு ஒரு கலந்துரையாடலை நடத்தி இருக்கிறார்.

மாவட்ட அமைப்பாக இருக்கட்டும், ஒன்றிய அமைப்பாக இருக்கட்டும், பேரூர் கழகமாக இருக்கட்டும் அல்லது சார்பு அணிகளாக இருக்கட்டும், கழகத்தின் ஒவ்வொரு செயல் வீரருக்கும் தலைமையும், தலைவர் அவர்களும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக இதனை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

### கழகத்திற்கான 23 சார்பு அணிகள்

இங்கு இருக்கின்ற மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமை சொல்கின்ற பணிகளைத் தட்டாமல் செயல்படுத்துகிறீர்கள். களத்தில் கழகம் என்றால் அது என்றைக்கும் நீங்கள்தான். அதேபோல, இந்தியாவில் எந்த ஒரு இயக்கத்துக்கும் இல்லாத ஒரு சிறப்பு, தி.மு.கழகத்துக்கு இருக்கிறது. அதுதான் கழகத்திற்கான 23 சார்பு அணிகள்தான்.

அணிகள் என்றால், ஆங்கிலத்தில் விங்ஸ் (Wings) என்று சொல்வார்கள். `இளைஞர் அணி’ (Youth Wing), `மாணவர் அணி’ (Student Wing), `மருத்துவ அணி’ (Medical Wing), இப்படிப் பல விங்ஸைக் கொண்டதுதான் நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

இத்தனை அணிகளும் Wings-ம், கழக அமைப்புடன் இணைந்து சிறப்பாக, சிறகாகச் செயல்படுவதால்தான், இன்றைக்கு நம் கழகம் ஒவ்வொரு தேர்தலிலும், மக்கள் மனதிலும் உயர உயர பறந்து கொண்டிருக்கிறது. இத்தனை அணிகளும் ஒழுங்காகச் செயல்பட்டதால்தான் நாம் உயரே பறந்துக் கொண்டு இருக்கிறோம்.

விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் 23 சார்பு அணிகளுக்கும் மாவட்ட அளவில் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒன்றியம், நகரம், பேரூர் அளவில் எடுத்துக் கொண்டால், பல அணிகளில் பொறுப்புகள் முழுமையாக நியமிக்கப்பட்டுள்ளன. சில அணிகளில், ஒரு சில ஒன்றியங்களில் முழுமையாக அந்தப் பணி நிறைவுபெறவில்லை. அதை விரைந்து முடித்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

### 200 தொகுதிகள் இலக்கு

அந்தக் காலத்தில் போருக்குச் செல்கிறவர்கள் கும்பலாக, கூட்டமாகச் செல்பவர்களை விட, அணி அணியாகத் திட்டமிட்டுச் செல்பவர்கள்தான் அந்தப் போரில் வெற்றிபெற முடியும். அதுபோலத்தான், நாமும் தேர்தல் என்ற போருக்கு வந்துவிட்டோம். தேர்தல் பணியில் ஈடுபடும்போது 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் நமக்கு இலக்கைக் கொடுத்து உள்ளார்கள்.

அதனால் நாமும் அணி, அணியாகச் செல்ல வேண்டும். இந்தத் தேர்தலை கும்பலாகக் கூட்டமாகச் சந்திக்காமல் அணி, அணியாக வியூகம் அமைத்து சந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சார்பு அணியினரைச் சந்தித்துப் பேசும்போது வழக்கமாக `தாய்க்கழகத்தினர் எங்களை மதிப்பதில்லை, சரியாக அழைப்பதில்லை’ என்ற குறையைச் சொல்வார்கள். அதேபோலக் கழக அமைப்பில் உள்ள நிர்வாகிகள், சில சார்பு அணி நிர்வாகிகள், எங்களைக் கலந்தாலோசித்து நடப்பதில்லை என்ற புகாரை எல்லோரும் சொல்வார்கள்.

இது பெரிய பிரச்சினை கிடையாது. நாம் இரண்டு பேரும் சேர்ந்து உட்கார்ந்து பேசி தீர்க்கக் கூடிய ஒன்றுதான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். களப்பணிதான் நம்மை மேலும், மேலும் மெருகேற்றும். வெளியுலகுக்கு உங்களைக் களப்பணித்தான் காண்பிக்கும்.

### செயல்திட்டத்தை வகுத்துக் கொள்ளுங்கள்!

உங்களால் ஒரு 500 வாக்குகளைத் திரட்ட முடியும் என்ற சூழல் வந்துவிட்டால், உங்களை யாராலும் தவிர்க்க முடியாது. அதற்கெனச் செயல்திட்டத்தை வகுத்துக் கொள்ளுங்கள். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். 500 வாக்கிற்கு நீங்கள் பொறுப்பு என்றால், யாராக இருந்தாலும் உங்களை அழைத்து, உங்களுக்கு மரியாதைக் கொடுத்துப் பேசித்தான் ஆக வேண்டும். உங்களுக்கு முக்கியத்துவம் உண்டு.

யார் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, நான் என் இயக்கத்துக்காக, என் கொள்கைக்காகப் பணியாற்றுகிறேன் என்று செயல்பட்டு, நீங்கள் எல்லோருக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவற்றையும் துறந்துவிட்டுக் கழகப் பணியாற்றுங்கள் என்று சொல்லவில்லை. நேற்று தலைவர் கோயம்புத்தூர் கூட்டத்திலும் இதைத்தான் அறிவுறுத்தி இருக்கிறார். குடும்பத்திற்கும் நேரத்தைச் செலவிடுங்கள். தொழில் செய்பவர்களாக இருந்தால் அதற்கும் கவனம் செலுத்துங்கள். அதேசமயம் ஒரு நாளில் இரண்டு மணி நேரத்தை நம் கட்சிப் பணிக்கு, இயக்கப் பணிகளுக்குத் தயவுசெய்து ஒதுக்குங்கள். வார இறுதியில் ஒரு நாளை மட்டும் கட்சிக்காக முழுமையாக உங்களை ஒப்படைத்துக் கொள்ளுங்கள்.

நாம் கழக அமைப்பில் இல்லை, சார்பு அணிதானே என்று, அணிகளின் நிர்வாகிகள் சுணக்கமாக இருக்கக் கூடாது. ஏனென்றால், இளைஞர் அணி என்ற அணிதான் இன்றைக்குத் தமிழ்நாட்டின் முதலமைச்சரையே உங்களுக்குக் கொடுத்து இருக்கிறது.

மாணவர் அணி என்ற அணிதான் கழகத்துக்குப் பொதுச் செயலாளரைக் கொடுத்து இருக்கிறது. இப்படிப் பல அணிகள் இருக்கின்றன. வழக்கறிஞர் அணி, மகளிர் அணி என்ற பல அணிகள்தான் கழகத்திற்குப் பல சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கழகத்திற்கும், நம் நாட்டிற்கும் கொடுத்து இருக்கிறது. இன்னும் பெருமையாகச் சொல்லவேண்டும் என்றால், உங்கள் மாவட்டப் பொறுப்பாளர்கூட விளையாட்டு மேம்பாட்டு அணியில் இருந்து வந்தவர்தான்.

### பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சிக்களம்

இங்கே இருக்கும் பல மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணியில் திறம்படச் செயலாற்றியவர்கள்தான். ஆகவே, சார்பு அணி நிர்வாகிகளுக்கான முக்கியத்துவம் எப்பொழுதும் இருந்துகொண்டேதான் இருக்கும். அணிகள் என்பது கழக அமைப்பில் முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சிக்களம் என்று கூடச் சொல்லலாம். கடமையை மட்டும் நீங்கள் செய்துகொண்டே இருங்கள். தக்க நேரத்தில் உங்களுக்கான அங்கீகாரத்தை நம் தலைவர் அவர்கள் கண்டிப்பாக, நிச்சயமாகத் தருவார்கள் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது, திருத்துவது, கழகத்துக்கு ஆதரவான குடும்பங்களைத் தக்க வைப்பது, நடுநிலையான வாக்காளர்களைக் கழகத்தின் ஆதரவாளர்களாக மாற்றுவது போன்ற பணிகளைக் கழக அமைப்பினரும், சார்பு அணியினரும் இன்றிலிருந்தே தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கான வழிகாட்டுதல்களை நம் தலைமைக் கழகமும், மாவட்டக் கழகமும் உங்களுக்கு வழங்கும்.

### கலந்துரையாடல் கூட்டம்

இங்கே வழக்கறிஞர் அணி நிர்வாகிகளும் வருகை தந்திருக்கிறீர்கள். தேர்தல் நேரத்தில் வழக்கறிஞர்களின் பணி மிக மிக முக்கியமானது என்பது, நான் சொல்லி தெரிய வேண்டியதில்லை. பி.எல்.ஏ-2 (BLA-2), பி.எல்.சி (BLC) நிர்வாகிகளை நீங்கள் ஒருங்கிணைத்து அவர்களுக்கான பயிற்சிகளை, மாவட்டக் கழகத்தோடு இணைந்து கொடுக்கலாம். வேலைகளைப் பிரித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள்ளே ஒரு ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும். மாதம் ஒரு முறையேனும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அளவில் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலந்துரையாடும் போதும், திட்டங்களை வகுக்கும் போதும் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் நிச்சயமாக வரத்தான் செய்யும். ஒரு வீட்டிற்குள்ளேயே அத்தனை முரண்பாடுகள் இருக்கும் போது, அமைப்பாகச் சேர்ந்து செயல்படும் போது நிச்சயம் கருத்து வேறுபாடுகள் வராமல் இருக்காது. ஆனால் நம் நோக்கம், ஒரே நோக்கம்தான். 2026-ஆம் ஆண்டுத் தேர்தல் வெற்றி மட்டும்தான் நமது நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை, கருத்துகளை, ஆலோசனைகளை மேற்கொள்ளுங்கள்.

### வாக்காளர்களைச் சந்தியுங்கள் வாக்காளர்களைச் சந்திக்கும் செயல் திட்டங்களை உருவாக்குங்கள்.

பெரிய அளவில் செலவு செய்து ஒரு நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்பது அவசியம் கிடையாது. பிரமாண்டமான ஒரு நிகழ்ச்சியைச் செய்ய வேண்டும் என்று எந்த அவசியமும் கிடையாது. வாக்காளர்களைச் சந்திப்பது என்பது மட்டுமே எண்ணமாக இருந்தால் போதும். கருத்தரங்கு, தெருமுனைக் கூட்டம், உதவி முகாம், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, இரத்ததான முகாம்கள் போன்ற எளிமையாக நிகழ்ச்சியாகத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

நீங்கள் முடிவு செய்திருப்பதை, மாவட்டச் செயலாளரிடமும், மாநில நிர்வாகிகளிடமும் கலந்து பேசிவிட்டுப் பணியைத் தொடங்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அவரவர் பகுதிகளில் தெருக்களைப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒருவருக்கு நான்கு அல்லது ஐந்து தெருக்கள் மட்டுமே வரும். அங்கு சிறு சிறு நிகழ்ச்சிகளை நடத்துங்கள். அந்தத் தெருவில் உள்ளவர்களை, நம் கழக உறுப்பினராகச் சேருங்கள். மாலை நேரங்களிலும், வார இறுதியிலும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நோட்டீஸ் கொடுத்துவிட்டுப் பேசிவிட்டு வாருங்கள். நம் கழக அரசுத் திட்டங்களின் நோட்டீஸைக் கொடுத்துவிட்டு வாருங்கள். நம் தலைவர் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறார். முன்பெல்லாம் மாவட்டத்திற்கு ஒரு திட்டம் கொண்டு வருவோம். ஒரு பயனாளி இருப்பார். அதைதாண்டி, அதன்பிறகு சட்டமன்றத்திற்கு ஒரு திட்டம் அதில் சில பயனாளிகள் இருப்பார்கள். இப்போது அப்படிக் கிடையாது வீட்டுக்கு ஒரு பயனாளி இருக்கிறார்கள் நம் திராவிட மாடல் அரசில். அவர்களிடம் பேசினால் தெரிந்துவிடும். ஏதாவது ஒரு பயனாளி இருப்பார்கள்.

கலைஞர் உரிமைத்தொகை திட்டமாக இருக்கும், விடியல் பயணம் திட்டமாக இருக்கும், நிச்சயம் புதுமைப்பெண் திட்டமாக இருக்கும், இல்லை, தமிழ்ப்புதல்வன் திட்டமாக இருக்கும். இப்படி ஏகப்பட்ட திட்டங்கள் ஒவ்வொருவருக்கும் வயதிற்குத் தகுந்த மாதிரியும், பெண்களுக்குத் திட்டம், ஆண்களுக்குத் திட்டம், மாற்றுத் திறனாளிகளுக்குத் திட்டம், மூன்றாம் பாலினத்தவர்களுக்குத் திட்டம் இப்படிப் பல திட்டங்களை நம் கழக அரசு இந்த மூன்றரை வருடங்களில் தலைவர் அவர்கள் நிறைவேற்றிக் காட்டி இருக்கிறார்.

இதையெல்லாம் பற்றி அவர்களிடம் பேசினாலே தெரிந்துவிடும். அவர்கள் குடும்பத்தில் யார் பயன் பெற்றுள்ளார்கள் என்று தெரிந்து விடும். தேர்தலுக்கு முன்பாக ஒவ்வொரு வாக்காளரையும் நாம் குறைந்தது நான்கைந்து முறையாவது சந்தித்திருக்க வேண்டும் என்பதுதான் நம் ஒரே இலக்காக இருக்க வேண்டும். அடுத்து வருகிற 15 மாதம் நமக்கு மிகமிக முக்கியமான `கோல்டன் பீரியட்’ என்று சொல்லலாம். ஆகவே, ஒவ்வொரு வீடாக ஏறி இறங்குங்கள்.

பொதுமக்கள், உங்கள் முன்வைக்கின்ற கோரிக்கைகளைக் கேட்டு, அதனை உங்களால் முடிந்த வரை நிறைவேற்றிக் கொடுங்கள். சின்னக் கோரிக்கையாக இருந்தால் உங்களாலேயே செய்ய முடியும். இல்லையெனில், அங்கு இருக்கின்ற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்று அதனை நிறைவேற்றித் தருகிற பணிகளில் ஈடுபடுங்கள். மிக முக்கியமாகக் களத்தில் எப்படி ஆக்டிவாக இருக்கிறீர்களோ, அதேபோலச் சமூக வலைத்தளங்களிலும், நீங்கள் ஆக்டிவாகச் செயல்பட வேண்டும்.

வாட்ஸ்-அப் குரூப்பைத் தொடங்கி அதில், உங்கள் பகுதியில் இருக்கின்ற மக்களை உறுப்பினராகச் சேருங்கள். அதன்வழியாகத் தகவல்களைக் கொண்டு சேருங்கள். மற்றவர்களைப் போல பொய் செய்தியைக் கொண்டுபோய்ச் சேருங்கள் என்று சொல்லவில்லை. நம் கழகத்திற்கு வரலாறு இருக்கிறது. நமக்குத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் கொள்கைகள், கோட்பாடுகள், லட்சியங்கள் இருக்கின்றன. கலைஞரின் எழுத்துகள் இருக்கின்றன. அதைக் கொண்டு போய்ச் சேருங்கள். மற்றவர்களுக்கு அவை எதுவுமே கிடையாது.

அ.தி.மு.க-விற்கோ மற்றும் எதிர்க்கட்சிகளுக்கோ ஒரு சிலர் பெயர் கூடச் சொல்ல விரும்பவில்லை. அவர்களுக்கு வரலாறே கிடையாது. அவர்கள் கொள்கை என்ன என்று கேட்டீர்கள் என்றால், தி.மு.க-வை எதிர்ப்பது மட்டுமே அவர்களின் கொள்கையாக இருக்கும். அதனால்தான் அவர்கள் எல்லாம் பொய் செய்திகளைப் பரப்புகிறார்கள். சொல்வதற்கு எதுவும் இல்லை என்று கதைக்கட்டி விடுவது. அதையும் நம்புவதற்கு ஒரு சிலர் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குச் சரியான செய்திகளை, உண்மையான செய்திகளை, உண்மையான வரலாற்றை, உண்மையான திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய்ச் சேருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். X எனப்படும் ட்விட்டர், பேஸ்புக், முக்கியமாக இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைத்தளப் பக்கங்களில் நீங்கள் அனைவரும் ஆக்டிவாகச் செயல்படுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் ஒவ்வொருவருமே ஓர் ஊடகமாகச் செயல்பட வேண்டும். கழக அரசின் சாதனைகளைச் சிறு, சிறு பாய்ண்ட்ஸ்களாக, ஃபோட்டோ கார்டாக நீங்கள் வெளியிடலாம். அல்லது, சார்ட்ஸ் (Shorts) வடிவிலான வீடியோ க்ளிப்ஸ் (Clips)-ஆக நீங்களே பேசி வெளியிடலாம்.

### 200 தொகுதிகளுக்கு மேல் வெல்லும்

எனவே, 200 தொகுதிகளுக்கு மேல் கழக அணி வெல்லும் என்று முப்பெரும் விழாவிலும் – நேற்று கோவையிலும் நம் கழகத் தலைவர் அவர்கள் உறுதியாகச் சொல்லி இருக்கிறார் என்றால், அது உங்களை நம்பி மட்டும்தான். ஆகவே, தலைவர் அவர்கள், நிர்ணயித்த இலக்கு மட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். அதற்கு நீங்கள் அனைவரும் 100 சதவிகிதம் அல்ல, நீங்கள் அனைவரும் 200 சதவிகிதம் அளவுக்கு உழைப்பைத் தர வேண்டும். உழைப்பவர்களை நிச்சயம் நம் கழகமும், தலைவரும் கைவிட மாட்டார்கள், அங்கீகரிப்பார்கள்.

### 2026 சட்டமன்றத் தேர்தல் வெற்றி

இங்கே 23 அணிகள் இருக்கலாம், மாவட்டம், ஒன்றியம், நகரம் என அமைப்புகள் இருக்கலாம். ஆனால், நாம் எல்லோரும் ஒரே அணிதான். அது யார் அணி என்றால், நாம் அத்தனைப்பேரும் கலைஞர் அணிதான் என்பதை மட்டும் மனதில் வைத்து செயல்பட வேண்டும்.

எனவே, 2026 சட்டமன்றத் தேர்தல் வெற்றி உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பால் கிடைத்த சாதனை வெற்றியாகட்டும் என்று கூறிக்கொண்டு, உங்கள் அனைவருக்கும் என் அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்துக்கொண்டு இந்தக் கூட்டம் இத்துடன் முடிந்துப்போகிற கூட்டம் இல்லை. இனி அடிக்கடி இந்த மாவட்டத்திற்கு வந்து உங்களையெல்லாம் அடிக்கடி சந்திப்பேன் என்று வாக்குறுதியைக் கொடுத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

இதில் அமைச்சர் க. பொன்முடி, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் மருத்துவர் கௌதம சிகாமணி, சட்டமன்ற உறுப்பினர், விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, சட்டமன்ற உறுப்பினர் மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் மருத்துவர் லட்சுமணன், மாவட்ட அவைத்தலைவர் ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் ஜனகராஜ், மாவட்டத் துணைச் செயலாளர்கள் முருகன், இளந்திரையன், கற்பகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் புஷ்பராஜ், கழகச் செயற்குழு உறுப்பினர்கள் பாஸ்கர், அப்துல்கலாம், செல்வராஜ், பஞ்சநாதன், சம்பத், இளங்கோவன், வாசன், ஏழுமலை, தேன்மொழி, பக்தவத்சலம், ராஜசேகர், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் அப்துல் மாலிக், சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர் துரை.கி.சரவணன் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.